DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 55/2020
*****

Deposition of Witness for Prosecution witness No: PW - 8

LW - 10

Name : **கண்ணன்**

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : **04.11.2025**

**( A1 present , A2 absent 317 petition filed and allowed )**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது காவல் துறையில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்று சிங்கம் புணரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2019ம் ஆண்டு குருவிகுளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 05.04.2019ம் தேதியன்று தலைமை காவலர் செந்தில் குமார் குருவிகுளம் காவல் நிலைய கு.எண்.92/2019 ச/பி.341,506(1),307 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்து எனது விசாரணைக்கு வந்ததை நான் பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். கடந்த 05.04.2019ம் தேதி சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன், சௌந்திரராஜ் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.8 ,வரைபடம் அ.சா.ஆ.9 ஆகும்.** அன்றைய தினமே, வழக்கின் புகார்தாரர் முத்துப்பாண்டி மற்றும் சாட்சிகள் பாலசுப்பிரமணியன், பெருமாள்,

வி.முருகேசன், எஸ். முருகேசன், ராஜேந்திரன், சௌந்தர ராஜ் தலைமை காவலர் செந்தில் குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். எனக்கு கிடைத்த தகவலின்படி அன்றைய தினம் மாலை 15.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகள் அந்தோணி ராஜ், வேல்முருகன் ஆகியோரை மலையான்குளம் ஜெய் பாரத் மில் கேட் அருகே வைத்து கைது செய்தபொழுது மேற்படி எதிரிகள் சாட்சிகள் முருகேசன், மற்றும் முருகேசன் ஆகியோர்கள் முன்பு சம்பவம் குறித்து எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும் இன்றி தானாக வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.10** ஆகும். பின்பு எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 15.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்பு சம்பவத்திற்கு பயன்படுத்திய சுமார் 250 மில்லி பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பாட்டில் மாலிக் Insecticide என்று எழுதப்பட்ட பூச்சு மருந்து வாடையுடன் கூடிய பாட்டில் ஒன்று மற்றும் பதிவெண் எழுதப்படாத பஜாஜ் சிடி 100 புளூ கலர் மோட்டார் சைக்கிள் ஒன்றுஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.11** ஆகும். அந்த **மருந்து பாட்டில் சா.பொ.1**. மோட்டார் சைக்கிள் **சா.பொ.2 ஆகும்.** அதன் பின்பு எதிரி மற்றும் சொத்துகளுடன் காவல் நிலையம் வந்து காவல் அடைப்பு அறிக்கை தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு 10.05.2019 ம் தேதியன்று மேற்படி வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.அண்ணராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது 341, 506(1), 307 இதச ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

(Sd)/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.